https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# வேற்றுமையும் வகைப்பாடும்

**முனைவர் த. சரண்யாதேவி**
உதவிப்பேராசிரியர்
மொழிகள் துறை – தமிழ்ப்பிரிவு
கற்பகம் உயர் கல்விக்கழகம், கோயம்புத்தூர்-21.

**ஆய்வுச்சுருக்கம்**

தெய்வத்தன்மை வாய்ந்த தமிழ்மொழி விரிந்த இலக்கணப் பரப்பைக் கொண்டு அமைகின்றது. மூத்த மொழியான தமிழ் மொழியில் பல இலக்கண நூல்கள் தோன்றியுள்ளன. அவற்றுள் முதன்மையான இலக்கண நூல் தொல்காப்பியம் ஆகும். ஐந்து இலக்கணங்களை எடுத்துரைக்கும் மூவிலக்கண நூலாகும். தொல்காப்பியர்க்கு முன்பே இலக்கண ஆசிரியர்கள் இலக்கண நூலை இயற்றியுள்ளனர் என்பதை அவருடைய நூற்பாக்களில் இடம்பெறும் என்ப, மொழிப, என்மனார் புலவர், உணர்ந்திசினோரோ, யாப்பறிப்புலவர், நுணங்குமொழிப் புலவர் போன்ற சொற்கள் இடம் பெறுவதன் மூலம் உணர்ந்து கொள்ள முடிகின்றது. அடியொற்றி பல இலக்கணிகள் இன்று வரை இடையறாது இலக்கணத்தின் தன்மையை மேன்மைப்படுத்தி வருகின்றனர். அவ்வகையில் வேற்றுமையும் வகைப்பாடும் குறித்து ஆராய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.

## Abstract

The Tamil language, endowed with divine qualities, has a vast grammatical scope. Many grammatical works have emerged in the ancient language of Tamil. Among them, the primary grammar text is the Tholkappiyam, which is a three-fold grammar text explaining five aspects of grammar. Based on this work, many grammarians have continuously enhanced the nature of grammar. In this regard, this article examines the variations and changes in different grammatical works.

**திறவுச் சொற்கள்**

வேற்றுமை, வேற்றுமையின் வகைகள், இலக்கணிகள்.

## வேற்றுமை

பெயர்ச்சொல்லின் பொருளை வேறுபடுத்துவது வேற்றுமை ஆகும். தொல்காப்பியர் வேற்றுமைக்குரிய இலக்கணத்தை வரையறுக்கவில்லை. இவருக்குப் பின் தோன்றிய நன்னூலார்

> **“ஏற்கு மெவ்வகைப் பெயர்க்குமீ றாய்ப் பொருள்**
> **வேற்றுமை செய்வன வெட்டே வேற்றுமை”** (நன்னூல் நூற்பா என் 291)

என்ற நூற்பாவின் மூலம் வேற்றுமைக்கு வரையறை எடுத்துரைக்கின்றார்.

சுவாமிநாத தேசிகர் வேற்றுமை என்பது உருபு ஏற்ற சொல் வேறுபடுகின்ற காரணத்தினால் வேற்றுமை என்றும், உருபு வேறுபடுகின்ற செயலினால் வேற்றுமை உருபு நோக்கிய சொல் வேற்றுமையை முடிப்பது வேற்றுமை ஆகும் என்று தன்னுடைய உரையில் மொழிகின்றார். (இலக்கணக் கொத்து உரை பக்க எண் 44)

தொல்காப்பியருக்குப் பின் தோன்றிய இலக்கணிகள் வேற்றுமைக்குரிய வரைய றையை எடுத்துரைப்பது இலக்கணத்தின் செம்மையை வெளிக் கொணர்கின்றது.

## வேற்றுமையின் வகைகள்

தொல்காப்பியர் தம் முன்னோர்கள் வேற்றுமையினை ஏழாக வகைப்படுத்தி உள்ளனர் என்பதை ***“வேற்றுமை தாமே ஏழென மொழிப”*** (தொல். சொல். நூ. எண் -62) என்ற நூற்பாவின் மூலம் கூறுகின்றார்.

தொல்காப்பியர் இவ்வேற்றுமைகளுடன் ***“விளிகொள் வதன்கண் விமியோ டெட்டே”*** என்ற நூற்பாவின் மூலம் விளி வேற்றுமை யைச் சேர்த்து எட்டாக வகைப்படுத்துகின் றார். (தொல். சொல். நூற்பா எண்-63)

தொல்காப்பியருக்குப் பின் தோன்றிய நன்னூலார், வைத்தியநாத தேசிகர், சுவாமிநாததேசிகர், முத்துவீர உபாத்தியாயர் போன்ற இலக்கணத்தார்கள் வேற்றுமையினை எட்டாக வகைப்படுத்துகின்றனர்.

இவர்களது காலகட்டத்திற்குப் பின் தோன்றிய இருபதாம் நூற்றாண்டினைச் சார்ந்த மரபு இலக்கண நூல்களில் ஒன்றான தமிழ்க் காப்பு இயம் வேற்றுமையின் வகையினை வகைப்படுத்தும் பொழுது தொல் மரபிலிருந்து மாறுபட்டு ஒன்பதாக வகைப்படுத்துகின்றது.

***“விளி கொள் வதன்கண் வேற்றுமை ஒன்பஃதே”*** என்ற நூற்பாவின் வழி ஒன்பதாகப் பாகுபடுத்த படுகின்றது. (தமிழ் காப் பு இயம் நூற்பா எண்-249)

## எழுவாய் வேற்றுமை

எழுவாய் வேற்றுமைக்குத் தனியே உருபு இல்லை. ஒரு பெயர்ச்சொல் வாக்கியத்தில் எழுவாய் அல்லது வினைமுதல் கருத்தா வாகச் செயல்படுவது எழுவாய் வேற்றுமை ஆகும். இவ்வேற்றுமையை முதலாம் வேற்றுமை என்றும் அழைப்பர். தொல்காப்பியர் எழுவாய் வேற்றுமை என்பது எழுவாய்க்குரிய பெயர் சொல்லாய் பயனிலைகளாக வரும் என்பதை ***“அவற்றுள் எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே”*** என்ற நூற்பா வின் மூலம் விளக்கியுள்ளார். (தொல். சொல். நூற்பா எண்-65) பவணந்தி முனிவர்,

***“எழுவா யுருபு திரிபில் பெயரே வினைப்பெயர் வினைக்கொள லதன் பய னிலையே”*** (நன்னூல் நூற்பா எண்-295)

என்ற நூற்பாவின் வழி முதல் வேற்றுமை உருபு திரிபில்லாத பெயராகும். இவ் வேற்றுமை வினையையும், பெயரையும், வினாவை யும் பயனிலையாகப் பெற்று வரும் என்று குறிப்பிடுகின்றார். நன்னூலார் எழுவாய் வேற்றுமை தொல்காப்பியர் கூறிய பெயர்நிலையுடன் வினை மற்றும் வினா சொற்களை ஏற்று வரும் என்று கூறுவதிலிருந்து வேறுபடுகின்றார் என்பது இங்கு ஒப்பிட்டுக் காட்டத் தக்கது.

## செயப்படுபொருள் வேற்றுமை

இரண்டாம் வேற்றுமை செயப்படுபொருள் வேற்றுமை என்று அழைக்கப்படுகின்றது. தொல்காப்பியர் இரண்டாம் வேற்றுமை தெரிநிலை வினை, குறிப்பு வினை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வரும் என்கின்றார். (தொல்காப்பியம் சொல்லதிகாரம் நூற்பா எண்-71)

தொல்காப்பியர் இரண்டாம் வேற்றுமை உருபு காப்பு முதலாகச் சிதைப்பு ஈறாக 28 பொருள்களில் வரும் என்று குறிப்பிடுகி ன்றார். (தொல்காப்பியம் சொல்லதிகாரம் நூற்பா எண் 71-72) தொல்காப்பியர் கூறுவதைப் பவணந்தி முனிவர்

***“இரண்டா வதனுரு பையே யதன் பொருள்***
***ஆக்க லழித்த லடைத லீத்தல்***
***ஒத்த லுடைமை யாதி யாகும்”***

(நன்னூல் நூற்பா எண்-66)

என்ற நூற்பாவின் மூலம் பொருள் நிலைகளைச் சுட்டுகின்றார்.

## சரவணத்தமிழன்

***“இரண்டன் உருபு ஐ; பொருள் செயப்படு பொருள்”*** (தமிழ் நூல் நூற்பா எண் 74 )

என்ற நூற்பாவின் மூலம் உருபு மற்றும் பொருளை வரையறுத்துள்ளார். இவர் தன்னுடைய உரையில் நன்னூலார் கூறிய பொருள் நிலைகளுடன் விரும்பல், அறிதல் என இரண்டு பொருள்களையும் சேர்த்துக் கூறுகின்றார்.

நவீன இலக்கணத்தார்கள் ஒரு பெயர்ச் சொல் வாக்கியத்தில் செயப்படுபொருளாகச் செயல்படுவது இரண்டாம் வேற்றுமை என்று குறிப்பிடுகின்றனர். எனவேதான் இவர் இரண்டாம் வேற்றுமையின் பொருள் செயல்படு பொருள் என்று வரையறுக்கி ன்றார்.

## கருவி வேற்றுமை

மூன்றாம் வேற்றுமை கருவி வேற்றுமை என்று அழைக்கப்படுகின்றது. தொல்காப்பியர் இவ் வேற்றுமையை ***“ஒடுவெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி”*** (தொல்காப்பியம் சொல்லதிகாரம் நூற்பா எண்-73) என்ற நூற்பாவின் மூலம் ஒடு எனும் உருபு வினையோடு சேர்ந்து கருவி பொருளில் வருவதாகக் கூறுகின்றார். நன்னூலார்

*மூன்றா வதனுரு பாலா னோடொடு*
*கருவி கருத்த வுடனி கழ் வதன் பொருள்*

*(நன்னூல் நூற்பா எண் 297)*

என்ற நூபாவின் மூலம் மூன்றாம் வேற்றுமை உருபு ஆல், ஆன், ஒடு, ஓடு அகியனவாகும். இவ் உருபுகளில் ஆல், ஆன் இவ்விரண்டும் கருவி மற்றும் கருத்தாப் பொருளில் வரும் என்றும், ஒடு, ஓடு என்பன உடன்நிகழ்ச்சிப் பொருள்களில் வரும் என்றும் குறிப்பிடு கின்றார்.

மீ.காசுமான் நன்னூலார் கூறும் மூன்றாம் வேற்றுமைக்கு உரிய நான்கு உருபுகளில் ஒடு,ஓடு என்ற இரண்டு உறுப்புகளை மட்டுமே ஏற்றுக்கொண்டார். ஆல் எனும் வேற்றுமை உருப்பினை எட்டாம் வேற்றுமை யில் இடம் பெறுவதாக எடுத்துரைக்கின் றார். (தமிழ்க் காப்பு இயம் நூற்பா எண் 253-270)

## கொடை வேற்றுமை

நான்காம் வேற்றுமை கொடைப் பொருள் வேற்றுமை என்றும், கோடற்பொருள் வேற்றுமை என்றும் அழைக்கப்படுகின்றது. தொல்காப்பியர் கோடற் பொருள் சிறப்பாக இருப்பதினால்தான் எப்பொருளாக இருந்தா லும் அப்பொருளினை ஏற்கக்கூடிய தன்மை யினைக் கொண்டதாகும் என்று உரைக்கின் றார். இவர் இவ்வேற்றுமைக்குரிய பொருள் நிலைகளாக வினை உடைமை முதலாகச் சிறப்பு ஈறாகப் பத்தாக வகைப்படுத்து கின்றார். (தொல்காப்பியம் சொல் அதிகாரம் நூற்பா எண் 75 )

நன்னூலார் நான்காம் வேற்றுமை உருபு கொடை, பகை, நேர்ச்சி, தகவு, அதுவாதல், பொருட்டு, முறை ஆகிய ஏழு பொருள்களில் வரும் என்று சுட்டுகின்றார். இப்பொருள்கள் புணரும் பொழுது தன்னை ஏற்றுக்கொண்ட பெயர்ப் பொருளை வேற்றுமை செய்து வரும் என்று மொழிகின்றார். நன்னூலாரை பின்பற்றியே தொன்னூல் விளக்கத்தாரும் நான்காம் வேற்றுமையினை எடுத்துரைக்கின் றார். (தொன்னூல் விளக்கம் நூற்பாஎண் 59)

## நீக்கல் வேற்றுமை

ஐந்தாம் வேற்றுமை நீக்கப்பொருள் வேற்றுமை என்றும் அழைக்கப்படுகின்றது. தொல்காப்பி யர் இவ் வேற்றுமைக்கு உரிய உருபாக 'இன்' என்றும் இவ்வேற்றுமைக்குரிய பொருள்கள் வண்ணம், வடிவு, அளவு, சுவை, தன்மை, வெம்மை, அச்சம், நன்மை, தீமை, சிறுமை, பெருமை என இருபத்தி எட்டாக வகைப் படுத்துகின்றார். (தொல்காப்பியம் சொல்லதி காரம் நூற்பா எண் 78 )

நன்னூலார் இவ் வேற்றுமையின் உருபு 'இல், இன்' என்று சு ட்டுகின்றார். இவ்வுருபு நீக்கல், உவமை, எல்லை, ஏது ஆகிய நான்கு பொருள்களில் வருவதாகக் கூறுகின்றார். (நன்னூல் நூற்பா எண் 299 )

சரவணத் தமிழன் ஐந்தாம் வேற்றுமை குறித்துக் கூறுகையில்

***ஐந்தன் உருபே இன் இல் என்பர்***

***நீங்கல் பொருள்தர நிகழும் போதில்***

***நின்று இருந்தென்பன நிரலே இணையும்***

(தமிழ் நூல் நூற்பா எண் 77 )

என்ற நூற்பாவின் மூலம் இவ் வேற்றுமை நீங்கல் பொருளில் வருகின்ற போது 'நின்று, இருந்து' போன்ற சொல் உறுப்புகளையும் பெற்று வருவதாகக் குறிப்பிடுகின்றார் .

இவர் நன்னூலார் குறிப்பிடும் உவமை, எல்லை, ஏது போன்ற பொருள்களை ஏற்றுக் கொள்ளவில்லை. அதற்கான காரணத்தைக் கூறுகையில்,

எல்லை - திருவாரூரின் மேற்கு தஞ்சாவூர்

ஏது - கல்வியின் பெரியன் கம்பன்

திருவாரூரினுக்கு மேற்கு தஞ்சாவூர் என்றும் கல்வியினால் பெரியன் கம்பன் என்றும் எல்லை, ஏது இவ்விரண்டும் சாரியைத் தன்மையுடன் நிற்கின்றன. இவ்வாறு நிற்பதி னால் தனித்தனியாக வலியுறுத்தாமல் சுட்டப் படுகின்றன.

ஒப்பு- காக்கையிற் கரிது களம்பழம்

இத்தொடர் ஒப்பு எனினும் உரழ்வதாலும் ஒப்புப் பொருள் இதற்கு இற்றை வழக்கின்மையும் அறிக என்று எடுத்துரைக்கி ன்றார். (தமிழ் நூல் பக்க எண்-28, 29)

## உடைமை வேற்றுமை

ஆறாம் வேற்றுமை உடைமை வேற்றுமை என்றும் கிழமை வேற்றுமை என்றும் அழைக்கப்படுகின்றது. தொல்காப்பியர் ஆறாம் வேற்றுமையின் உருபாக 'அது' என்னும் உருபினைக் கூறுகின்றார். (தொல்காப்பியம்-சொல்லதிகாரம் நூற்பா எண்-79) இவ்வேற்றுமையின் அஃறிணை உருபு 'அது' என்றும் உயர்திணை உருபு 'கு' என்றும் சுட்டுகின்றார். (தொல்காப்பியம் சொல்லதிகாரம், நுற்பா எண்-90) நன்னூலார் இவ் வேற்றுமையின் ஒருமைக்கு அது, ஆது என்ற உருபுகளையும் பன்மைக்கு 'ஆ' என்ற உருப்பினையும் உரைக்கின்றார். (நன்னூல் நூற்பா எண்-300)

நன்னூலாரை பின்பற்றியே இலக்கண விளக்கத்தாரும் ஆறாம் வேற்றுமைக்கு உரிய உருபினை ஒருமை, பன்மை என்ற பாகுபாட்டில் பகுக்கின்றார். (இலக்கண

விளக்கம் நூற்பா எண்-203 )

சரவணத்தமிழன் தமக்கு முன்பிருந்த இலக்கணிகள் குறிப்பிடும் ஆறாம் வேற்றுமை உருபுகளில் 'அது' என்னும் உருபினை மட்டுமே ஏற்கின்றார். நன்னூலார் கூறும் ஆது, ஆ என்ற உருபினை ஏற்கவில்லை. இந்நூலார் "**ஆறன் உடைமை உருபு அது, உடைய**" (தமிழ் நூல் நூற்பா எண்-78) என்ற நூற்பாவின் மூலம் 'அது' என்ற வேற்றுமை உருபினையும் 'உடைய' எனும் சொல் உருபினையும் கூறியிருக்கின்றார் என்பது வெளிப்படுகின்றது .

## இட வேற்றுமை

ஏழாம் வேற்றுமை இட வேற்றுமை என்றும் அழைக்கப்படுகின்றது. தொல்காப்பியர் இவ் வேற்றுமைக்கு உரிய உருபு 'கண்' என்றும், வேற்றுமை வினை செய்கின்ற இடம், நிலம், காலம் என்ற முப்பொருள்களின் அடிப்படை யில் தோன்றும் என்று மொழிகின்றார். (தொல்காப்பியம் சொல்லதிகாரம் நூற்பா எண்-81)

நன்னூலார் தொல்காப்பியர் கூறும் முப்பொருளுடன் சினை, குணம், தொழில் ஆகிய மூன்று பொருள்களையும் சேர்த்து ஏழாம் வேற்றுமை உருபு வரும் என்று பகுக்கின்றார். மேலும் தற்கிழமைப் பொருளிலும், பிறிதின் கிழமைப் பொருளிலும் இடமாக நின்று தம்மை ஏற்றுக்கொண்ட பெயர் பொருளை வேற்றுமை செய்துவரும் என்று மொழிக்கின்றார். (நன்னூல் நூற்பா எண்-301)

காசுமான் வேற்றுமை உருபுகளைக் கூறுகையில் "எழுவாய், ஐ, ஒடு, கு, இன், அது, இல்" என்ற நூற்பாவில் கூறுகிறார். (தமிழ் காப்பியம் நூற்பா எண்-248) இவர் ஏழாம் வேற்றுமை உருபு 'இல்' என்று கூறுகின்றார். முன்னோர் கூறுகின்ற 'கண்' எனும் விகுதியை 'இல்' எனும் விகுதியாக மாற்றி அமைக்கப்பட்டுள்ளதே தவிர இவ்வேற்றுமை பெறும் பொருள்களில் எந்த ஒரு மாற்றமும் ஏற்படவில்லை. எனவே தான் பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் பெருவழக்காக அமைத்தல் பொருட்டு 'இல்' எனும் உருபினை பயன்படுத்தியுள்ளார் என்பது வெளிப்படுகின்றது .

## விளி வேற்றுமை

விளி வேற்றுமை என்பது உரையாடுவோர் படர்க்கை இடத்திற்கு உரியவரை முன்னிலைப்படுத்தி அழைத்து பேசுவதே ஆகும். தொல்காப்பியர் வேற்றுமை, வேற்றுமைமயக்கம் இவ்விரண்டு இயல்களுக் குப் பிறகு விளிமரபு எனும் இயலை அமைத்து அண்மைவிளி, சேய்மைவிளி என்ற தன்மையின் அடிப்படையில் விளி யினை விளக்கமாக எடுத்துரைத்துள்ளார்.

நன்னூலார் விளி ஏற்கும் பெயரின் ஈற்றெழுத்துத் திரிதல், கெடுதல், மிகுதல், இயல்பாதல், ஈற்றயல் நின்றதன் திரிபு என்ற தன்மையில் அமைவதாக் குறிப்பிடுகின்றார். (நன்னூல் நூற்பா எண்- 303)

விளிவேற்றுமைக்கும் ஏனைய வேற்றுமைக்கும் ஒரு முக்கியமான வேறுபாடு உண்டு. என்னவெனில், விளிவேற்றுமையைத் தவிர்த்த ஏனையவேற்றுமைகள் தான் ஏற்றுக்கொண்ட பெயர்ச்சொல் வாக்கியத்தில் எழுவாய், செயப்படுபொருள் போன்று வாக்கிய உருபு களாக அமைகின்றன. ஆனால், விளி வேற்றுமை பெயர் வாக்கியத்திற்கு வெளியே நிற்கின்றது. அதனால் தான் விளி வேற்றுமைக்கு உருபு இல்லை என்பது வெளிப்படுகின்றது.

## முடிவுரை

தொல்காப்பியத்திற்கு பின் தோன்றிய இலக்கணங்கள் வேற்றுமை தொடர்பான கருத்துக்களை எடுத்துரைப்பதில் பெரும் பாலான இடங்களில் தொல்காப்பியத்தைத் தழுவி இருந்தாலும் காலத்தின் தேவைக் கேற்ப ஒரு சில இடங்களில் புதிய இலக்கண விதிகளை பயன்படுத்தியுள்ளனர் என்பது வெளிப்படுகின்றது. எனவே, நன்னூலாரின் கூற்றுப்படி "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவழக்கால வகையினான" என்ற கருத்து நோக்கத்தக்கது .

## துணைநூற் பட்டியல்

1. தொல்காப்பியம் சொல்லதிகாரம் இளம்பூரணார்வுரை - தமிழ்மண் பதிப்பகம், சென்னை, முதற்பதிப்பு- 2003
2. நன்னூல் சொல்லதிகாரம்-சாமிநாதையர வர், உ.வே(பதி) சென்னை, ஐந்தாம் பதிப்பு -1991.
3. இலக்கண விளக்கம், எழுத்ததிகாரம்-கோபாலையர், தி.வே.,(பதி) சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர், இரண்டாம் பதிப்பு-2001.
4. இலக்கண கொத்து-சுவாமிநாத தேசிகர் வித்யா நுபாலன அச்சகம், சென்னை ஆறாம் பதிப்பு-1956.
5. தமிழ்க் காப்பியம்-காசுமான்,மீ. காசுமான் பதிப்பகம், மார்த்தாண்டம், முதற்பதிப்பு-2005.
6. தமிழ் நூல்-சரவணத்தமிழன்,த., தமிழன் பதிப்பகம், திருவாரூர், முதற்பதிப்பு- 2003.